29-01-2014 Dinathanthi

## சென்னை துறைமுகத்திலிருந்து

# 2 மெட்ரோ ரெயில்கள் கோயம்பேடு பணிமனைக்கு வந்தன

சென்னை, ஜன.29-

சென்னை துறைமுகத்திலிருந்து 2 மெட்ரோ ரெயில்கள், கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரெயில்வே பணிமனைக்கு நேற்று இரவு கொண்டு செல்லப்பட்டன.

### மெட்ரோ ரெயில்கள் வருகை

சென்னையில் மெட்ரோ ரெயில் திட்டம், ரூ.14 ஆயிரத்து 600 கோடி செலவில், 45.1கிலோ மீட்டர் தூரத்திற்கு 2 வழித்தடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. வண்ணாரப்பேட்டை-சென்னை விமான நிலையம் மற்றும் சென்டிரல்-பரங்கிமலை இடையே மொத்தம் 42 மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட உள்ளன.

இதற்காக ரூ.1,471.3 கோடி மதிப்பில் 42 ரெயில்களுக்கு தலா 4 பெட்டிகள் வீதம் 168 பெட்டிகள் தயாரிக்க பிரேசில் நாட்டில் உள்ள அல்ஸ்டாம் ரெயில் பெட்டி தயாரிக்கும் நிறுவனத்திடம் ஒப்பந்தம் போடப்பட்டது.

### கோயம்பேடு பணிமனை

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 9 ரெயில்களுக்கான 36 பெட்டிகள் பிரேசில் நாட்டில் தயாரித்து அனுப்பவும், மீதம் உள்ள ரெயில்கள் ஆந்திர மாநிலம் தடா ஸ்ரீ சிட்டியில் தயாரித்து அனுப்புவதாகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

தற்போது 5 ரெயில்களுக்கான 20 பெட்டிகள் பிரேசில் நாட்டில் இருந்து கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரெயில் பணிமனைக்கு கொண்டு வரப்பட்டு உள்ளன.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

### ஆரம்ப நிலை சோதனை

பிரேசில் நாட்டிலிருந்து மெட்ரோ ரெயில் சேவைக்காக 2 ரெயில்கள் கப்பலில் நேற்று முன்தினம் சென்னை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டன. நேற்று சுங்கவரி சோதனைக்கு பின்னர் மெட்ரோ ரெயில் நிறுவன உயர் அதிகாரிகளிடம் ரெயில்கள் ஒப்படைக்கப்பட்டன. இவற்றை ராட்சத லாரிகளில் ஏற்றிக் கொண்டு நேற்று இரவு 11 மணியளவில் கோயம்பேடு மெட்ரோ ரெயில் பணிமனைக்கு ஊழியர்கள் கொண்டு சென்றனர்.

பணிமனையில் ஏற்கனவே 3 ரெயில்கள் கொண்டுவரப்பட்டு சோதனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது 2 ரெயில்கள் வந்த நிலையில் பணிமனை வழக்கத்தை விட 5 ரெயில்கள் நிறுத்தப்பட்டு உள்ளதால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து ஓரிரு நாட்களில் புதிய ரெயில்களின் ஆரம்ப நிலை சோதனை தொடங்கப்பட உள்ளது. இது தவிர ஓரிரு நாட்களில் ஆந்திர மாநிலம் தடா சிட்டியிலிருந்து ஒரு ரெயில் லாரியில் கொண்டுவரப்பட உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.